


11. 06. 2026

தலைப்புச் செய்திகள்

- மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியால் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இலக்குகளை விரைந்து எட்ட முடியும் என்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- நித்தி ஆயோக்கின் நிர்வாக குழு கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று பங்கேற்றுள்ளார்.
- பெண்கள் பாதுகாப்பிற்கு தமிழக அரசு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- தி.மு.க. கூட்டணியில் தற்போதைய சூழலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடம்பெற இயலாது என்று இதன் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.
- FIFA உலககோப்பை கால்பந்து போட்டிகள் மெக்சிக்கோவில் கோலாகலமாக இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

நித்தி ஆயோக்

மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளால் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இலக்குகரள விரைந்து எட்ட முடியும் என்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் தலைமையில் நித்தி ஆயோக்கின் 11-வது ஆட்சி மன்ற குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்று வரும் நிலையில், கூட்டாண்மை உணர்வுடன் மத்திய மாநில அரசுகள்

இணைந்து நாட்டின் வளர்ச்சிப் பாதையை முன்னெடுத்து செல்ல வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

"வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான உள்ளடக்கிய மனிதவள மேம்பாடு" என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் உட்பட அனைத்து மாநில முதலமைச்சர்களும் பங்கேற்றுள்ளனர்.

தொழில்முனைவோர் அமைப்பை முன்னெடுத்து செல்வது, திறன் மேம்பாடு வளர்ச்சி, வேலைவாப்பிற்கான சூழலை உருவாக்குவது உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

விவசாயிகளின் நலனே அரசின் முன்னுரிமை என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் வாழ்க்கையை வளமாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு முனைப்புடன் மேற்கொள்ளும் என்றும் பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உணவு பாதுகாப்பு, ஊட்டச்சத்து, வளம் போன்றவற்றின் காரணிகளாக விவசாயிகள், திகழ்கிறார்கள் என்று கூறிய அவர், பிரதமரின் வேளாண் நிதியுதவி திட்டம், பயிர் பாதுகாப்பு திட்டங்கள் வேளாண் பிரதிநிதிகளுக்கு பெரிதும் உதவுவதாக எடுத்துரைத்தார்.

விவசாயிகளுக்கான சூரிய ஒளி திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் இணைப்புகளை பெற்று அவர்கள் பயனடைவதாக கூறியுள்ளார்.

வேளாண் அட்டைகள், விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிப்பதாக கூறியஅவர், அவர்தம் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளால் நியாயமான விலை அவர்களுக்கு கிடைப்பதாகவும் எடுத்துரைத்தார்.

ட்ரோன் விமானங்கள், மண்வள அட்டைகள், இயற்கை உரங்கள் போன்றவை பயிர் உற்பத்தியை பெருக்குவதாகவும் அவர் கூறினார்

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதை மத்திய அரசு தொடர்ந்து உறுதி செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

வேளாண்மை, வாழ்வாதாரத்திற்கு மட்டுமல்லாமல் தேசத்திற்கான அடிப்படை கட்டமைப்பாகவும் திகழ்கிறது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

கலால் வரி

எத்தனால் கலந்த பெட்ரோல் மீதான கலால் வரியை மத்திய அரசு நீக்கியுள்ளது.

இதனையடுத்து 22 சதவிகிதம், 25, 27, 30 சதவிகித எத்தனால் கலந்த பெட்ரோலுக்கான கலால் வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

எத்தனால் கலப்பு திட்டத்தை வலுப்படுத்தவும், இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் சார்ந்திருத்தலை குறைக்கவும் அரசின் இந்நடவடிக்கை வழிகோலுகிறது.

உள்நாட்டு உற்பத்தி எத்தனால் பயன்பாடு மற்றும் அதன் தேவையை ஊக்குவிக்கவும், கரியமிலவாயு வெளியேற்றத்தை தடுக்கவும் கலால்வரி நீக்கம் பெரிதும் பயனளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

சைபர் குற்றங்கள்

செயற்கை நுண்ணறிவு மூலமான சைபர் குற்றங்கள் தொடர்பான அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாக மத்திய அரசு கவலை தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு மூலம் போலி காணொலிகளை உருவாக்கி தனித்துவ அடையாளங்களையும் ஏற்படுத்தி நிதி சார்ந்த குற்ற செயல்களை குற்றவாளிகள் மேற்கொண்டு வருவதாகவும், இந்திய சைபர் குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையம் அறிவுறுத்தி உள்ளது.

எனவே நிதி நிறுவனங்கள் இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை வலுப்படுத்தி, வாடிக்கையாளர்கள் நலன்களை பாதுகாக்க வேண்டுமென்றும் அரசு ஆலோசனைகளை வழங்கி உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

ஆதவ் அர்ஜுனா

தமிழ்நாட்டில் புதிய விளையாட்டுக்கொள்கை விரைவில் வெளியிடப்படும் என்று மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

இளையோரை அதிகளவில் விளையாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில் காலி இடங்களை விளையாட்டு திடல்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

வெங்கடரமணன்

மயிலாடுதுறை மாவட்த்தில் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கடரமணன் இன்றும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

திருஇந்தளூர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வு செய்த அவர், பள்ளிக்குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் அறிவுறுத்தி உள்ளார்.

மதுரையில் இன்று இப்பணிகளை ஆய்வு செய்த அவர், கட்டுமானப்பணிகள் 90 சதவிகிதம் நிறைவடைந்து உள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி ஸ்டாலின்

பெண்கள் பாதுகாப்பிற்கு தமிழக அரசு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீ வைகுண்டத்தை சேர்ந்த பெண் ஒருவர், த.வெ.க.வை சேர்ந்தவர்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாகி இருப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விவகாரத்தை தமிழக அரசு மூடி மறைக்க முயல்வதாகவும் அவர் குறை கூறினார்.

பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும்,

குற்றவாளிகளுக்கு துணை போனவர்கள் உடனடியாக பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

வீரபாண்டியன்

தி.மு.க. கூட்டணியில் தற்போதைய சூழலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடம்பெற இயலாது என்று இதன் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

கோவையில் அக்கட்சியின் மாநில செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், நாட்டின் கல்வியமைப்பு சீர்குலைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் இருமொழிக்கொள்கை தொடர வேண்டுமென்று வலியுறுத்திய அவர், கோவை மற்றும் மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்றார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரச்சனைகள் குறித்து முதலமைச்சர் நேரடி ஆலோசனை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஊடகமே ஜனநாயகத்தின் இன்றியமையா அம்சம் என்று கூறிய அவர், பத்திரிக்கையாளர்களை, முதலமைச்சர் தொடர்ந்து சந்திக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

தொலைக்காட்சி சானல் எதுவும் முடக்கப்பட கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறைகளை தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுப்பதோடு, சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு காணவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் தேர்தலின் போது கூட்டணி தொடர்பான இறுதி அறிவிப்பு வெளியாகும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

சிதம்பரம்

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்கும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணியிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விலகும் முடிவை ஏற்றுக்கொள்வதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

பாரதிராஜா

மறைந்த பிரபல திரைப்பட இயக்குனர் பாரதிராஜாவின் உடல் இன்று பிற்பகல் முழு அரசு மரியாதையுடன் அவரது சொந்த ஊரான தேனியில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது.

தேனி தேவதானபட்டி பண்ணை வீட்டில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு ஏராளமானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி பாரதிராஜாவின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை மாவட்டத்தில் பிரதமரின் தொழில் பழகுநர் பயிற்சி சேர்க்கை முகாமை ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமார் தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

ஈரோடு

ஈரோடு புஞ்சை புளியம்பட்டி வார சந்தையில் சின்ன வெங்காயம் விலை திடீர் வீழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தென்காசி

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தொடர் மழை காரணமாக தென்காசி மாவட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

FIFA

23-வது FIFA உலககோப்பை கால்பந்து போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

மெக்சிக்கோ, கனடா, அமெரிக்கா நாடுகளில் 16 நகரங்களில் வரும் ஜூலை 19-ம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா, ஜெர்மனி, பிரேசில், இத்தாலி உட்பட 48 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந்திய நேரப்படி இன்று நள்ளிரவு பன்னிரெண்டரை மணிக்கு மெக்சிக்கோவில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் மெக்சிக்கோ தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இலங்கை தம்புலாவில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தானிற்கு எதிராக முதலில் விளையாடும் இந்திய A அணி சற்றுமுன் 46 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 315 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖